**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**
**S.C.No.89/2018**

**Deposition of Witness for : P.W.1**

**Name : திருமதி. ராஜாத்தி**

**Father's Name : மனோகரன்**

**Village :**

**Taluk :**

**Caste :**

**Calling :**

**Religion :**

**Age :**

**எதிரிகள் 2 முதல் 4 ஆஜர்.**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 04.09.2023.**

**முதல் விசாரணை -**

**நான் சென்னை டி.பி.சத்திரத்தில் வசிக்கிறேன். குடும்ப தலைவி. இறந்துபோன பிரேம்குமார் எனது மகன். ஆஜர் எதிரிகளை தெரியாது. இறந்த முருகனை தெரியாது. பட்டியல் சாட்சி 2,3 ரீனா மற்றும் நிம்மி என்னுடைய மகள்கள். என் மகன் இறந்தது சம்பந்தமாக போலிசார் விசாரணை செய்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. என் மகன் இறந்தது சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.**

சாட்சி புகார் வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

நான் சென்னையில் இருந்தேன். என் மகள் நிம்மி போன் செய்து அழைத்ததால் ஊருக்கு வந்தேன். என்ன போன் செய்தார் என்றால் என் மகள் நிம்மி என் மகன் இறந்துவிட்டதாக போனில் தகவல் சொல்லி அழுதார். எப்படி இறந்தார் என்று நான் கேட்டேனா என்றால் அந்த நேரத்தில் அழ தான் முடிந்தது. என் மகனை எங்கு எப்போது போய் பார்த்தேன் என்றால் பிரேதம் வீட்டிற்கு வந்தபோது தான் பார்த்தேன். தேதி ஞாபகம் இல்லை.

என் மகன் என்ன வேலை செய்து வந்தார் என்றால் உணவு தயாரிக்கும் பணியும், தயாரித்த உணவை டெலிவரி கொடுக்கும் பணியையும் செய்து வந்தார். என் மகனுக்கு வேறு எந்த பழக்கம் உண்டா என்றால் வேறு எந்த பழக்கமும் என் மகனுக்கு கிடையாது. என்னை போலிசார் விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்தார்கள். என் மகன் கஞ்சா விற்பனை செய்வார், கள்ளச்சாராய விற்பனை செய்வார் என்றும் மாமூல் வாங்குவார் சமூக விரோத செயல்களில் ஈடுபடுவார் என்று சொன்னேனா என்றால் நான் எதுவும் சொல்லவில்லை.

விற்பனை செய்த தொகையை அவருடைய குழு தலைவரிடம் கொடுப்பார் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. மாமூல் வசூல் செய்வதில் என் மகன் குழுவிற்கும் எதிரிகள் குழுவிற்கும் தகராறு என்று சொல்லியிருக்கிறேனா என்றால் எனக்கு என் மகன் போவது வருவது பற்றி எல்லாம் எதுவும் தெரியாது. என் மகன் மீது கொலை வழக்கு உள்ள விவரம்

தெரியுமா என்றால் தெரியும். என் மகனும் அவரை சேர்ந்தவர்களும் வெள்ளைமுரளி என்பவரை கொலை செய்ததாக வழக்கு உள்ளது என்றால் சரி தான். அந்த கொலை குற்றத்தில் என் மகன் முதல் குற்றவாளி என்றால் சரி தான். அந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

என் மகன் மீதுள்ள கொலை வழக்கில் இந்த வழக்கின் 1ஆம் எதிரி முருகன் தான் சாட்சி என்றால் அதை பற்றியெல்லாம் எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தபோது வாக்குமூலத்தில் உள்ளவாறு சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கை பற்றி நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக காவல்நிலையத்தில் நான் யாரையும் அடையாளம் காட்டவில்லை. போலிசாரும் இவர்கள் தான் என் மகனை கொன்றார்கள் என்று யாரையும் அடையாளம் காட்டவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக நான் எந்தவொரு வாக்குமூலமும் கொடுக்கவில்லை, எந்தவொரு காவல்நிலையத்திலும் என்னை விசாரிக்கவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.